# தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை- 106
தொலைபேசி எண். 2475 3001 நிகரி 2475 3300, 24751870
மின் அஞ்சல் tnsec@tn.nic.in இணையதளம் www.tnsec@tn.nic.in

-----------------------------------------------------------------------

## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண். 9 /2011** **நாள். 23 .09.2011**

**தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்ட பயனாளிகளுக்கு உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், மக்கள் நலப்பணியாளர்கள் மூலம் ஊதியம் வழங்க தடை**

**************

தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம், பாராளுமன்ற ஒப்புதலுடன் மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் தொடர் திட்டமாகும். இந்த திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கான ஊதியங்களை தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சிப்பிரதிநிதிகள் இதுவரை வழங்கி வந்தனர்.

ஆனால், தமிழ்நாட்டில் உள்ளாட்சித் தேர்தல் நடைபெறவுள்ளதால், தேர்தல் நன்னடத்தை விதிமுறைகள் தற்போது முழுமையாக அமல்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே பதிவு செய்துள்ளவர்களுக்கு மட்டுமே பணிகள் வழங்கப்பட வேண்டும். தேர்தல் அறிவிப்பிற்குப் பின் எந்த புதிய பணிகளையும் மேற்கொள்ளக்கூடாது. புதிதாக எந்த நபர்களுக்கும் இந்தத் திட்டத்தின் கீழ் பணியும் வழங்ககூடாது.

மேலும், உள்ளாட்சித் தேர்தல் வாக்குப்பதிவு நாளன்றோ அல்லது மூன்று நாட்களுக்கு முன்போ திட்டப்பயனாளிகளுக்கு பணப்பட்டுவாடா எதுவும் செய்யக்கூடாது. இந்த திட்டப் பயனாளிகளுக்கான ஊதியத்தை தற்போதுள்ள உள்ளாட்சிப் பிரதிநிதிகள், மக்கள் நலப் பணியாளர்கள் மூலம் வழங்க முற்றிலும் தடை செய்யப்படுகிறது. அரசு அலுவலர்கள் மூலமாக மட்டுமே தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்ட பணிகளுக்கான பணியாளர்கள் ஊதியங்கள் வழங்கப்பட வேண்டும் என்று ஆணையம் உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

(தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணைய ஆணைப்படி)

(ஒம்) லோ.கிருஷ்ணமூர்த்தி,
மக்கள் தொடர்பு அலுவலர்